செ.வெ.எண்-33 நாள்-15.10.2020

## அரியலூர் மாவட்டம்

## தோட்டக்கலைத்துறையின் மூலம் நடப்பாண்டில் ரூ.54 கோடி மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம் அமைக்க இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் மற்றும் திருமானூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (15.10.2020) பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதன்படி, அரியலூர் வட்டாரத்திற்குட்பட்ட அருங்கால் கிராமத்தில் விவசாயி திரு.செல்வம் என்பவர் வயலில் ரூ.95,498/- மதிப்பீட்டிலான அரசு மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து, ஒரு ஏக்கர் பரப்பளவில் கோழிக்கொண்டை, செவ்வந்தி பூ மற்றும் 50 சென்ட் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு வருவதையும், விவசாயி திரு.பூமாலை என்பவர் நிலத்தில் ரூ.1.12 இலட்சம் மதிப்பீட்டிலான அரசு மானியத்தில் நிலப்போர்வை மற்றும் சொட்டுநீர் பாசனத்தின் மூலம் தக்காளி சாகுபடி, மக்காச்சோளம் சாகுபடி ஆகியவை சாகுபடி செய்யப்பட்டு வருவதையும், ரூ.75,000/- மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டையினையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

மேலும், திருமானூர் ஒன்றியம், சுள்ளக்குடி ஊராட்சிக்குட்பட்ட காட்டூர் கிராமத்தில் 50 சதவீத மானியத்தொகையான ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் நிழல்வலை குடில் அமைக்கப்பட்டு, தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருவதையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, இத்திட்டங்கள் குறித்தும், இத்திட்டங்களின் மூலம் விவசாயிகள் பயன்பெற்று வருவது குறித்தும் விவசாயிகளிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

**இதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் சொட்டுநீர் பாசனம், மானிய விலையில் காய்கறி விதைகள், வேளாண் இயந்திரங்கள், இடுபொருட்கள், பண்ணைக்குட்டை அமைத்தல், நிழல் வலை குடில் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, நடப்பாண்டில் அரியலூர் மாவட்டத்திற்கென 7,200 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.54 கோடி மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.9 கோடி மதிப்பீட்டில் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இலக்கீடு நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் காய்கறி பயிர் சாகுபடியினை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் ஊக்கத் தொகை வழங்கிட இலக்கு பெறப்பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கம், நீர்வள நிலவள திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் காய்கறி சாகுபடி விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக 1 எக்டருக்கு ரூ.2,500/- வழங்க ரூ.22.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் கத்தரி, வெண்டை, முருங்கை, மிளகாய், பாகல், புடல், பூசணி போன்ற காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகள் காய்கறிகளை அதிக அளவில் சாகுபடி செய்து விவசாயிகள் பயன்பெறலாம். மேலும் இது தொடர்பான தகவல்களுக்கு தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் அனைவரும் தமிழ்நாடு அரசின் மூலம் தோட்டக்கலைத் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, தோட்டக்கலை துணை இயக்குநர் அன்புராஜன், தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரவீன், தோட்டக்கலை அலுவலர் பிரகாஷ் மற்றும் விவசாயிகள், தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**